


**10. 01. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. வளமான தேசத்தை கட்டமைப்பதில் இளைய தலைமுறையினரின் பங்களிப்பை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. பிரதமரின் சமையல் எரிவாயு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் பயனாளிகளின் எண்ணிக்கை தற்போது இருமடங்காக அதிகரித்துள்ளது என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.K.N. நேரு தெரிவித்துள்ளார்.

4. வரும் சட்டப்பேரவை தேர்தலில் பி.ஜே.பி. இரட்டை இலக்க எண்ணிக்கையில் தமிழகத்தில் வெற்றி பெறும் என்று கட்சியின் மாநிலத் தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

5. மயிலாடுதுறை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை இம்மையம் தெரிவித்துள்ளது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

வளமான, வலிமையான தேசத்தை கட்டமைப்பதில் இளைய தலைமுறையினரின் பங்களிப்பை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் வளர்ச்சியடைந்த பாரதம் இளைய தலைவர்கள், கலந்துரையாடல் மாநாட்டை ஒட்டி சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில் படைப்பாற்றல் திறனுடன் செயலாற்றும் இளையோரை சந்திப்பதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

புதுதில்லியில் வளர்ச்சியடைந்த பாரதம் கலந்துரையாடல் நிகழ்வில் இன்று துவக்க உரையாற்றிய மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மண்டவியா, நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளையோரின் பங்கு இன்றியமையாதது என்று குறிப்பிட்டார்.

தொழில்நுட்பம், தொழில்முனைவோர் ஆளுமை, நீடித்த நிலைத்தன்மை, சமூக மேம்பாடு உள்ளிட்ட பிரிவுகளில் இளையோர் ஆக்கப்பூர்வமான தீர்வுகளை எட்ட இந்நிகழ்ச்சி வகை செய்வதாக கூறினார்.

இளையோரின் துணிச்சல் மிகு சிந்தனைகளும், கருத்துக்களும் நாட்டின் மாற்றத்திற்கு வழிகோலுவதுடன் தேச கட்டமைப்பில் அவர்தம் பங்களிப்பை அதிகரிப்பதற்கான மத்திய அரசின் அர்ப்பணிப்பு மிகு நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நேற்று தொடங்கிய இந்த நான்கு நாட்கள் மாநாட்டில் பிரதமர் நாளைமறுநாள் சிறப்புரையாற்றுகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர் - குஜராத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி ராஜ்கோட்டில் 2-வது எழுச்சிமிக்க குஜராத் மண்டல மாநாட்டில் பங்கேற்கிறார்.

3 நாள் பயணமாக அங்கு செல்லும் பிரதமர், பொறியியல் தொழில்நுட்பம், பசுமை எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வளர்ச்சிப் பணிகளையும் தொடங்கி வைக்கிறார்.

முன்னதாக இன்றுமாலை சோம்நாத் ஆலயத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

உலகளாவிய ஆற்றல் மையமாக நம் தேசம் உருவெடுக்க தற்சார்பு நிலை மிகவும் தேவை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று உரையாற்றிய அவர், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களால் இந்நிலை சாத்தியமாவதாக எடுத்துரைத்தார்.

தாய்மொழியை முன்னெடுத்துச் செல்வதன் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர், பிறமொழிகளை கற்றறிந்தாலும், தாய்மொழி பேணி பாதுகாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஹர்தீப் சிங் பூரி

நாடுமுழுவதும் தனிநபர் கழிப்பறைகள் பெண் குழந்தைகளின் மாண்பிற்கு உத்வேகம் ஏற்படுத்தி உள்ளதாக மத்திய பெட்ரோலியம் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், 2014-ம் ஆண்டு, 14 கோடியாக இருந்த தனிநபர் கழிப்பறைகளின் எண்ணிக்கை கடந்த ஜனவரி மாதம் 33 கோடியே 33 லட்சமாக அதிகரித்துள்ளது என்று எடுத்துரைத்தார்.

அதேபோல் நகர்ப்புறங்களில் மட்டுமே இருந்து வந்த சமையல் எரிவாயு வசதி, பிரதமரின் சமையல் எரிவாயு திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப் படுத்தப்பட்டு, 10 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த திட்டத்தின் கீழ் மானிய விலையில் தற்போது பயனடைவதாக குறிப்பிட்டார்.

உஜ்வாலா திட்டத்தின் 80 சதவிகித பயனாளிகள் கிராமத்தில் வசிக்கும் மகளிரே என்று அவர் பெருமிதம் வெளியிட்டார்.

தமிழகத்தை பொறுத்தவரை 2014-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பிரதமரின் சமையல் எரிவாயு திட்டப் பயனாளிகள் எண்ணிக்கை இருமடங்காக தற்போது அதிகரித்திருப்பதாக அமைச்சர் கூறினார்.

பி.ஜே.பி. தலைமையிலான மத்திய அரசு மகளிரை முன்னிறுத்தி, வளர்ச்சியை முன்னெடுத்து செல்வதாக அவர் கூறினார்.

வரும் ஆண்டுகளில் சர்வதேச அளவில் எரிசக்தி ஆற்றலை பயன்படுத்தும் முக்கிய நாடாக இந்தியா உருவெடுக்கும என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பிறநாடுகளுடன் ஒப்பிடுகையில், நம் நாட்டின் மருத்துவ செலவு மிக குறைவாக உள்ளது என்றும் திரு. ஹர்தீப் சிங் பூரி கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 28-ம் தேதி தொடங்குகிறது.

ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்பதால் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் அன்றைய தினம் உரையாற்றுவார்.

29-ம் தேதி பொருளாதார ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

2 கட்டங்களாக நடைபெறும் பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் கூட்டம் அடுத்தமாதம் 13-ம் தேதி நிறைவடையும்.

மீண்டும் மார்ச் 9-ம் தேதி கூடும் நாடாளுமன்றம் ஏப்ரல் 2-ம் தேதிவரை நடைபெறும்.

பட்ஜெட் கூட்டத்தொடரில் மக்கள் நலன்சார்ந்த ஆக்கப்பூர்வமான விவாதங்கள் இடம்பெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

உலக ஹிந்தி மொழி தினம்

உலக ஹிந்தி மொழி தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

கல்வி, கலாச்சார பரிவர்த்தனைகள், தூதரக நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றில் உலக நாடுகளிடையே ஹிந்தி மொழி பயன்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட உலக நாடுகளின் 770 கல்வி நிறுவனங்கள் ஹிந்தி மொழியை கற்பிப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் சென்னை எழும்பூரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தூய்மைப்பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முன்னதாக கொளத்தூரில் பொங்கல் விழா கொண்டாட்டங்களில் பங்கேற்ற அவர், திருக்குறளை பெருமைப் படுத்தும் வகையில் 38 மாவட்டங்களிலும் குறலோவியம், ஒப்புவித்தல், பட்டிமன்றம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக கூறினார்.

இதனிடையே தமிழகத்தில் இதுவரை ஒரு கோடியே 11 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் ரொக்கம் அடங்கிய பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

K. N. நேரு

தமிழகத்தில் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதை அரசு உறுதி செய்துள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி திருவெறும்பூரில் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி பேசிய அவர், மாவட்டத்தில் 9 சட்டமன்ற தொகுதிகளிலும் குடிநீர் திட்டப்பணிகள் திறம்பட செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி உள்ளிட்ட பல்வேறு பணிகளால் நகராட்சிக்குட்பட்ட அனைத்து மக்களும் பெரிதும் பயனடைவதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

காந்தி

ராணிப்பேட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் போகி விரிவான தூய்மைப்பணி இயக்கத்தை மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு. காந்தி இன்று தொடங்கி வைத்தார்.

சிப்காட் முதலீட்டாளர்களுக்கான செயல்திறனை மேம்படுத்தி, சுகாதாரமான சூழலை உறுதி செய்யும் வகையில் இப்பணிகள் நடைபெறவுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

தமிழ்நாட்டில் வரும் சட்டப்பேரவை தேர்தலில் பி.ஜே.பி. இரட்டை இலக்க எண்ணிக்கையில் வெற்றி பெறும் என்று கட்சியின் மாநிலத் தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், எத்தனை தொகுதிகளில் பி.ஜே.பி. போட்டியிடும் என்பது குறித்த முடிவு இன்னும் எட்டப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி தலைமையிலான அரசு ஆட்சியமைக்கும் பட்சத்தில், தேர்தல் முடிவின் அடிப்படையிலேயே அமைச்சர்களின் தேர்வு அமையும் என கூறினார்.

கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், தற்போது கூட்டணிக்குள் பல கட்சிகள் வந்து கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

கொங்கு மண்டலத்தை மட்டுமல்லாமல் தமிழகத்தையே இலக்காக கொண்டு அரசியல் பயணத்தை பி.ஜே.பி. முன்னெடுத்து வருவதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

CRPF

திருவள்ளுர் மாவட்டம் ஆவடி மத்திய ரிசர்வ் காவல்படை வளாகத்தில் பயிற்சி முடித்த வீரர்களின் அணிவகுப்பு இன்று நடைபெற்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஆயிரத்து 380 வீரர்களுக்கு மத்திய ரிசர்வ் காவல்படையின் தலைமை

இயக்குநர் திரு. ஞானேந்திர பிரதாப் சிங் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

முன்னதாக இவ்வீரர்களின் கண்கவர் கவாத்து அணிவகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

சிவகாசி

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பேட்டரியில் இயங்கும் மின்சார மிதிவண்டியை விருதுநகர் மாவட்டம் சிவகாசியை சேர்ந்த கல்லூரி மாணவர்கள் உருவாக்கியுள்ளனர்.

இதன் சிறப்பம்சங்கள் குறித்து அவர்கள் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை மலர் சந்தையில் வரத்து குறைவால் மல்லிகைப் பூ கிலோ 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் நிலையில், ஏற்றுமதி குறைந்துள்ளதாக பூ ஏற்றுமதியாளர் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

தென்மேற்கு வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்ததாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மயிலாடுதுறை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக இம்மையம் கூறியுள்ளது.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், கடலூர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

பிரீமியர் லீக்

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியின் நவி மும்பையில் இன்று குஜராத் ஜெயன்ஸ் – UP வாரியர்ஸையும்,

மற்றொரு ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் – டெல்லி கேப்பிட்டல்ஸையும் எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்திறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖